# லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) பதவி ஜஜஜ - வெற்றிடங்கள் 04

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) III பதவிக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கூடிய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

- **கல்வித் தகைமைகள்**

அ) க.பொ.த சாதாரண தர பரீட்சையில் பின்வரும் நான்கு பாடங்கள் அடங்களாக ஒரே தடவையில் ஆறு பாடங்களில் "சிறப்பு" (Credit Passes) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்
III. ஆங்கிலம்

ஆ) க.பொ.த உயர்தர பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப் பரீட்சை தவிர)

இ) மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, கணினி சொல் செயலாக்கம் (word processing) / தட்டச்சு ஆகியவற்றில் குறைந்தது மூன்று மாத காலப் படிப்பை முடித்திருக்க வேண்டும் அல்லது அதற்கு இணையான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

- **வயது எல்லை**

18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

- **ஏனைய தகைமைகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முறையாக ஆற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் மனத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
3. நற்குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

- **சம்பள அளவுத்திட்டம்**

ரூபா. [46,220 -10x540 -7x630 -4x890 -20x1, 190 -83,390]

இப்பதவிக்கான நியமனம் ரூ. 46,220/- என்ற ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், இப்பதவிக்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அனைத்துப் கொடுப்பனவுகளும் நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.

- **பொதுவான நிபந்தனைகள்**

முறையான நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்பதவி நிரந்தரமானதுடன் இதில் ஊழியர் சேமலாப நிதிய (EPF) நன்மைகளும் அடங்கும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், கட்டாயமாக மூன்றாண்டு கால தகுதிகாண காலப்பகுதியில் பணியாற்ற ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி தங்கள் விண்ணப்பங்களைத் தயாரித்து, பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026 செப்டம்பர் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழ்
ii. கல்வி சான்றிதல்கள்
iii. அனுபவ ரீதியான சான்றிதல்கள்
iv. தொழில் தகைமைச் சான்றிதழ்கள்
v. அண்மையில் பெற்றுக் கொண்ட நடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு
vi. சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத அல்லது முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
vii. உங்கள் விண்ணப்பத்துடன்இ கீழே உள்ள இணைப்பின் மூலம் வழங்கப்படும் புழழபடந படிவத்தையும் பூர்த்தி செய்வது கட்டாயமாகும். https://forms.gle/fix7bGtmj3HjLXLNA

நிர்வாக நம்பிக்கைப் பொறுப்பாளர்,
லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்,
இல 100 3/2,
சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு – 02

Scan: Google Form